




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.3.2025) தலைமைச் செயலகத்தில், திருநங்கைகள் நலவாரிய உறுப்பினர்கள் ஏ.ரியா, ஆர்.அனுஸ்ரீ, நாடக கலைஞர் மற்றும் எழுத்தாளர் ஏ.ரேவதி, வழக்கறிஞர் ஆர்.கண்மணி மற்றும் திருநங்கையர்கள் கே.ஆராதனா, ஏ.நிவேதா, எஸ்.கிரித்திகா, டி.கார்க்கி, என்.ஜென்சி, சாரிகா, கௌதமி ஆகியோர் சந்தித்து, தமிழ்நாடு அரசின் 2025–26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவிடும் புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தை மூன்றாம் பாலினத்தவர்க்கும் விரிவுபடுத்தப்படும் என்றும், ஊர்க்காவல் படையில் மூன்றாம் பாலினத்தவர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (15.3.2025) முகாம் அலுவலகத்தில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.3.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார் தனது பிறந்தநாளையொட்டி குடும்பத்துடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### மக்களவை தொகுதி மறுவரையறை விவகாரத்தில்

# மாநிலங்களுடன் ஆலோசிக்காமல் ஒன்றிய அரசு முடிவு எடுக்கக் கூடாது!

## கேரள முதல்வர் பினராயி விஜயன் அறிக்கை!



திருவனந்தபுரம், மார்ச் 16–

மக்களவை தொகுதி மறுவரையறை விவகாரத்தில் அனைத்து மாநிலங்களுடனும் ஆலோசனை நடத்திய பின்னரே ஒன்றிய அரசு முடிவெடுக்க வேண்டும் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு :-

ஒரு மாநிலத்தின் தற்போதைய விகிதாச்சார இடங்களை குறைக்காமல் மக்களவை தொகுதிகளை மறு நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மக்கள்தொகை கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்திய மாநிலங்களுக்கு இதில் பாதிப்பு ஏற்படக்கூடாது. சுதந்திரத்துக்குப் பிறகு ஒன்றிய அரசு கொண்டு வந்த மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு கொள்கைகளால் மக்கள் தொகையைக் குறைத்த மாநிலங்களுக்கு நாடாளுமன்றத்தில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தை குறைப்பது நியாயமற்றது. இதில் தவறிய மாநிலங்களுக்கு இது வெகுமதி அளிப்பது போல அமையும்.

விகிதாச்சார அடிப்படையில் தென் மாநிலங்களுக்கு கூடுதல் தொகுதிகள் கிடைக்கும் என்ற ஒன்றிய அரசின் வாதத்தை நம்ப முடியாது. இந்த விகிதமானது தற்போதைய நாடாளுமன்ற இடங்களின் சதவீதத்தின் அடிப்படையிலா, அல்லது மக்கள்தொகை புள்ளி விவரங்களின் அடிப்படையிலானதா என்பதையும் ஒன்றிய அரசால் தெளிவுபடுத்த முடியவில்லை. இந்த இரண்டு வழிகளிலும் தென்னிந்திய மாநிலங்கள் பிரதிநிதித்துவத்தை இழக்கும். தன்னிச்சையான செயல்களைத் தவிர்த்து, ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சியின் சாரத்தைக் காப்பது ஒன்றிய அரசின் பொறுப்பாகும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பட்ஜெட் இலச்சினையில் ரூ.என்று மாற்றிய

# தமிழக முதல்வரின் புரட்சிகரமான முடிவுக்கு பாராட்டு!

## கன்னட அமைப்பு தலைவர் கடிதம்!

பெங்களூரு, மார்ச் 16–

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு கர்நாடக ரக்ஷணா வேதிகே தலைவர் டி.ஏ.நாராயணகவுடா எழுதியுள்ள கடிதத்தில், 'தமிழ்நாடு நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு ஒரு நாள் முன்பாக இந்திய அரசு கடந்த 16 ஆண்டுகளாக பயன்படுத்தி வரும் தேவநாகிரி குறியீட்டை கைவிட்டு, அதற்கு பதிலாக தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் ரூ. என்ற எழுத்தை பயன்படுத்தும் உறுதியான தீர்மானம் எடுத்துள்ளீர்கள். ஒரு பெருமைக்குரிய இந்திய குடிமகனாகவும் கன்னடனாகவும் உங்களின் நடவடிக்கையை இதயபூர்வமாக வரவேற்கிறேன். உங்களின் உறுதியான செயல்பாட்டை பாராட்டுகிறேன்.

உங்களின் செயல்பாட்டிற்கு எவ்வளவு எதிர்ப்பு வரட்டும், மிரட்டல்கள் வந்தாலும் வடமாநிலத்தின் இந்தித் திணிப்புக்கு எதிராக தொடர்ந்து போராட்டம் நடத்தி வரும் உங்களின் உறுதி நிச்சயம் பாராட்ட வேண்டியதாகும். மொழி அடிப்படையில் தென்மாநிலங்களை நிரந்தர அடிமைகளாக மாற்ற வடமாநில இந்தி விசுவாசிகள் தொடர்ந்து முயற்சித்து வருகிறார்கள்.

அதை எதிர்த்து தமிழ்நாட்டில் திராவிட போராட்டம் நடத்தி வருவது தென்மாநில திராவிட மொழியினருக்கு பெருமையாக உள்ளது. மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகிய உணர்வுடன் மாநிலங்கள் இணைந்து காப்பாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

### ஈ.ராஜா எம்.எல்.ஏ.- ராணி ஸ்ரீகுமார் எம்.பி. பங்கேற்பு!

# தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் சிறப்புரை!

*தென்காசி, மார்ச் 16-*

*தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாளர் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமசந்திரன்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் சங்கரன் கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் கோ.பத்மநாபன் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் தனுஷ் எம்.குமார் (வாசுதேவநல்லூர்) பி.எம். ராமஜெயம் (சங்கரன் கோவில்) ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.*

*தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் உரையாற்றினர்.*

*நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, யு.எஸ்.டி.சீனிவாசன், பரமகுரு மாநிலம் மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, மாவட்ட பொருளாளர் இல.சரவணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் பத்தரம் சாகுல் ஹமீது, பா.மாரிசாமி, தேவதாஸ், பராசக்தி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன், பொன்.முத்தையா பாண்டியன், கடற்கரை, பூசைப்பாண்டியன், செல்லதுரை, கிறிஸ்டோபர், குணசேகரன், பெரியதுரை, ராமச்சந்திரன், வெள்ளத்துரை, பால்ராஜ், நகர செயலாளர்கள்*

*மு.பிரகாஷ்,அந்தோணிசாமி,பேரூர் செயலாளர்கள் கே.டி.சி.குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன், மாரிமுத்து, சேது சுப்பிரமணியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி முகேஷ்,மாணவர் அணி உதயகுமார், இலக்கிய அணி குரு வசந்த், பொறியாளர் அணி பசுபதி பாண்டியன், மருத்துவர் அணி மணிகண்டன், தொழிலாளர் அணி சரவணன், மீனவரணி சாமுவேல் விவசாய அணித் தலைவர் பாலசுப்பிரமணியன், வழக்கறிஞர் அணி தலைவர் முத்துராமலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.*

*இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-*

*திராவிட மாடல் முதலமைச்சர் கழகத்தலைவர் தளபதியார் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகை தரும்பொழுது தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சிறப்பான வரவேற்பு வழங்குவது என்றும்.*

*முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு கீழ்க்கண்டவாறு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், பொதுக் கூட்டங்கள் நடத்தியும், பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது என்றும்.*

*அதன்படி கோடை காலத்தை முன்னிட்டு ஒன்றிய, நகர, பேரூர், கழக பகுதிகளில் நீர் மோர் பந்தல் வைத்து தினமும் சிறப்பாக செயல்பட வேண்டியது. கோடை காலத்தை முன்னிட்டு சாலையோர வியாபாரிகளுக்கு நிழற்குடை வழங்க வேண்டியது.அரசு பொதுமருத்துவமனையில் இரத்த தானம் வழங்குவது. அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் செயல்பட்டு வரும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனநலம் குன்றிய குழந்தைகள் தங்கி உள்ள இடங்களுக்கு சென்று உணவு வழங்க வேண்டியது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருப்பரங்குன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நெல்லிக்குப்பம் புகழேந்தி, கவிஞர் சிவமுத்து வளவன் ஏர்போர்ட் பாண்டியன், உசிலை சிவா, வக்கீல் ஆர்.பாலாஜி, க.கிருஷ்ணபாண்டியன், பெரியசாமி, நாகராஜன், கே.ஐ.மகிழன், லதா அதியமான், விமல், சிவனாண்டி, டிஸ்கோ அலாவுதீன், முத்துராமன், கொம்பாடி தங்கம், ரம்யாமுத்துக்குமார், மாரியப்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.